**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.543/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 4 |
| Name | : | அர்ஜீன், 23 |
| Father Name/Husband Name | : | ராஜீவ் |
| Village | : | பாறைபட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | கார் வாஷிங் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of June 2026.

**(A1 present. A2 absent. 355 BNSS petition filed and allowed).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது பாறைபட்டியில் வசித்து கார் வாஷிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் இல்லாத 2வது எதிரியை எனக்கு தெரியும். எனது ஊர்க்காரர்கள். கடந்த 2024 ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் தேதி ஞாபகம் இல்லை ஒரு நாள் காலை 08.30 மணியளவில் எங்கள் ஊர் காலனியில் உள்ள பாலத்தில் எங்கள் ஊர்க்காரர்களிடம் நான் பேசி கொண்டிருந்தபோது அப்போது ராகுல், பாக்கியராஜ், கவிதா ஆகியோர் அங்கே வந்தார்கள். அப்போது கணேஷமூர்த்தியை பாக்கியராஜ் இரும்பு கம்பியால் கன்னத்தில் அடித்தார்.

2 பின்னர் இருளப்பனை ராகுல் கையால் அடித்தார். பின்னர் கணேஷமூர்த்தியை ராகுல் பிடித்து கொண்டு பாக்கியராஜ் கையால் அடித்தார். அப்போது பாக்கியராஜ் நான் போலீஸ்தான் நீ எங்கு வேண்டுமானாலும் போய் சொல்லி கொள் என்று கணேசமூர்த்தியை மிரட்டினார் மற்றும் கணேசமூர்த்தியை பாக்கியராஜ் தேவடியா மகனே என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். பின்னர் கணேசமூர்த்தி கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தார். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3. அ.சா.1 எனக்கு மாமா உறவு முறை. அ.சா.2 எனக்கு அண்ணன் உறவு முறை. ராகுல், கவிதா, பாக்கியராஜ் என்ன செய்தார்கள் என்றால் அவர்கள் சத்தம் போட்டுக் கொண்டே வந்து இரவு நடந்த சண்டை குறித்து கேட்டு விட்டு அடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இந்த வழக்கின் எதிர் வழக்கின் எதிரிகள் ராகுல் மற்றும் பாக்கியராஜை தாக்கியதாக எதிர் வழக்கு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

4. நான் சண்டை முடிந்தவுடனே எனது அம்மா ஊரான சில்லாங்குளத்திற்கு சென்றுவிட்டேன். சண்டை சம்பந்தமாக என்னிடம் யாரும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் அ.சா.2 மற்றும் அவருடன் சேர்ந்த நபர்களுக்கு நான் நெருங்கிய உறவினர் என்பதால் இந்த வழக்கின் எதிர் வழக்கின் எதிரிகள் ராகுல் தரப்பினரை அடித்ததை மறைத்து தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. நான் சொன்னது போல் பாக்கியராஜ் கம்பால் அடிக்கவில்லை என்றாலும், ராகுல் கையால் இருளப்பராஜை அடிக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிர் வழக்கின் எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்பதாலும், இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்பதாலும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும், நான் சம்பவத்தை உண்மையில் பார்த்திருந்தால் போலீசார் என்னை விசாரித்திருப்பார்கள் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 2வது எதிரி, அ.சா.1யை அசிங்கமாக திட்டவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.